செய்தி வெளியீடு எண் : 272 நாள் : 10.02.2024

**தலைமைச் செயலாளர் மற்றும் ஒன்றிய அரசின் செயலாளர் தலைமையில் ஜல் ஜீவன் திட்டம் மற்றும் தூய்மை பாரதம் திட்டம் ஆய்வுக் கூட்டம்: 10.02.2024**

ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் தூய்மை பாரதம் திட்டம் [ கிராமப்புறங்கள் ] ஆகிய திட்டங்களில் ஒப்புதல் வழங்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் வரும், ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும் தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., மற்றும் ஒன்றிய அரசின் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலாளர் திருமதி. வினித் மகாஜன், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (10.02.2024) ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வீடுதோறும் குடிநீர் இணைப்பு வழங்கும் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட, மற்றும் செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் குறித்தும் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், நடைபெற்று வரும் 45 புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்களில் முன்னேற்றம் குறித்தும், குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்படும் 56 திட்டங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் 100 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்கிய பின் கிராம சபைகளில் வைத்து உறுதி செய்வது குறித்தும், ஆலோசிக்கப்பட்டது.

ஊரகப் பகுதிகளில் தூய்மை பாரதம் என்ற திட்டத்தின் செயல்பாடுகள், திடக்கழிவு மற்றும் திரவக் கழிவு மேலாண்மை குறித்தும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முன்னோடி முயற்சிகள்

குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் தனிநபர் வீடுகளில் 100% கழிப்பறைகள் கட்டுவது மற்றும் பயன்படுத்துவதற்கு மாநில அரசால் மேற்கொள்ளப்படும் உத்திகள் குறித்தும், பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஜல் ஜீவன் இயக்க திட்டத்தில் தேசிய அளவில் 73.98% வீடுகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 1 கோடிக்கு மேல் அதாவது 80.43% வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கி தேசிய அளவில் மாநிலத்தின் சிறப்பான செயல்பாடு பாராட்டப்பட்டது. மேலும், மாநிலத்தின் அனைத்து அரசு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளுக்கு 100 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ள சிறப்பான நடவடிக்கைகள் இதர மாநிலங்களுக்கு முன்னுதாரனமாக உள்ளது எனவும் பாராட்டப்பட்டது. .

ஒன்றிய அரசின் கூடுதல் செயலாளர், இணைச் செயலாளர், இயக்குநர்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறையின் உயர் அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in